# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ அதி விசேஷமானது**

අංක **2117/42 - 2019** අප්‍රේල් **03** වැනි බදාදා - **2019.04.03**

**2117/ 42 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## உரித்துப் பதிவு செய்தல்

### காணித்துண்டுகளுக்கான உரிமைக் கோரிக்கைகளைக் கோருகின்ற அறிவித்தல்

1998 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்
(பிரிவு 12)

அறிவித்தல் இல: 62/0561 இரத்தினபுரி மாவட்டம்

சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில், பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 258ட - வடவலகிராமசேவை அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும், கணிஹம்முல்ல (பகுதி) அல்லது அதன் ஏதேனும் பாகம் (பிரிவு01) தொடர்பானதும், 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப்பதிவுச்சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 620 ஆம் இலக்க நில அளவீடு சார்ந்த படத்தில் பிரதிபலிக்கப்பட்டதுமான ஒரு காணித்துண்டுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட காணித்துண்டுகளுக்கான சொத்தாண்மைக்கு அல்லது உடைமைக்கு உரிமைக் கோரிக்கையுள்ள அல்லது அக்கறையுள்ள எவரேனுமாள் 2019.05.03 ஆந் திகதிக்கு முன்னர் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்குத் தமது உரிமைக்கோரிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட திகதிக்கு முன்னர் ஏதேனும் உரிமைக் கோரிக்கையைச் சமர்பிக்கத் தவறுகின்ற ஏதேனும் சந்தர்ப்பத்தில், காணிக்கான உரித்தைத் தீர்மானிப்பதற்கு மறுகட்சியில்லாத விசாரணையை நடாத்துவதற்கும், அதற்கிணங்க மேலேயுள்ள சட்டத்தின் 14ஆம் பிரிவின் நியதிகளின் படி அரசாங்க வர்த்தமானியில் அத்தகைய தீர்மானத்தை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்ட 710049 ஆம் இலக்க நில அளவீடு சார்ந்த படம் இயைபான கிராம சேவை அலுவலரின் அலுவலகத்தில், பிரதேச செயலகத்தில், மாவட்டநில அளவை அலுவலகத்தில், உரித்து நிருணய ஆணையாளர் அலுவலகத்தில், அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியின் அலுவலகத்தில் நுனித்தாராயப்படலாம்.

மேலதிக தகவல் , கிராம சேவை அலுவலரிடமிருந்து, அல்லது காணி உரித்து நிருணய ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம்.

**கே.ஏ.கே. ரஞ்சித் தர்மபால ,**
உரித்து நிர்ணய ஆணையாளர்.
(பதில் கடமை புரிபவர்)

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்,
இல. 1200/6, “மிஹிகத மெதுர”,
இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை
2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆம் திகதி.

04-590


1A - G 29821 - 19 (2019 / 04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

*மு.கு.* - இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.